# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 46/மா/2025
நாள் 05.03.2026

G. வெங்கடேஷ்
கள்ளக்குறிச்சி மாவட்டம் --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், L.F.ரோடு, கதவு எண் 233 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. வெங்கடேஷ் என்பவரின் 28.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.11.2024 அன்று பெறப்பட்டு 46/மா/2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், L.F.ரோடு, கதவு எண் 233 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. வெங்கடேஷ் என்பவரின் 28.11.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "சென்னை மாநகராட்சி 14வது மண்டலம், 186வது வார்டு ராஜேசுவரி நகர் மெயின் ரோடு, கதவு எண் 36 என்ற எண்ணில் உள்ள வீடு ரோட்டை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. தெரு சாலையை கிட்டத்தட்ட 6 அடி ஆக்கிரமித்துள்ளது. இது தொடர்பாக நான் கடந்த 31.10.2024 தேதியில் சென்னை மாநகராட்சி இன்டெர்நெட் வழியாக 2024–900KAT என்ற எண்ணில் புகார் பதிவு செய்தேன். என்னுடைய புகார் மீது சென்னை மாநகராட்சி அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரோட்டை ஆக்கிரமித்தவருக்கு எந்த நோட்டீசையும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அனுப்பவில்லை. ரோட்டை ஆக்கிரமித்தவருடன் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கைகோர்த்துக் கொண்டு பிரதிபலன் வாங்கிக் கொண்டு ரோடு ஆக்கிரமிப்புக்கு உடந்தையாக செயல்படுகிறார்கள்.
>
> என்னுடைய புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல் ரோட்டை ஆக்கிரமித்த நபருக்கு ஆதரவாக செயல்பட்ட சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆவண செய்ய கோருகிறேன். மேலும் என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டுகிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, மண்டல அலுவலர் தனது கடிதம் ம.அ.14.ந.க. எண் அ10/1457/2025 நாள் 29.04.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 கோட்டம் 186ல் இராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு கதவு எண் 36–ல் ரோட்டை ஆக்கிரமித்து கட்டப்பட்ட சரிவுபாதை அகற்றப்பட்டது. மேலும் தற்சமயம் வண்டி ஏறுவதற்கு தற்காலிகமாக மண் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. இது குறித்து தன்னுடைய 26.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"சேலம் உரிமையியல் நீதிமன்ற வழக்கில் எதிர்வரும் 06.01.2026 அன்று நான் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியுள்ளதால் எதிர்வரும் 06.01.2026 அன்று மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவ விசாரணையில் நான் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தாங்கள் தயவு செய்த நான் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் என் வழக்கினை தீர்வு செய்ய வேண்டுகிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் இளநிலை பொறியாளர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, கோட்டம் 186ல் இராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு, கதவு எண்.36ல் ரோட்டை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள சரிவு பாதையினை முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. மேலும் தற்சமயம் வண்டி ஏறுவதற்கு தற்காலிகமாக மண் கொண்டு சமன் செய்யப்பட்டுள்ளது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.".

7. மனுதாரரின் மனு, கடிதம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

சென்னை மாநகராட்சி 14வது மண்டலம், 186வது வார்டு ராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு, கதவு எண் 36 என்ற எண்ணில் உள்ள வீடு, சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது என்பதும், இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியிருப்பது மனுதாரரின் மனுவின் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 கோட்டம் 186ல் இராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு கதவு எண் 36–ல் ரோட்டை ஆக்கிரமித்து கட்டப்பட்ட சரிவுபாதை அகற்றப்பட்டு, தற்சமயம் வண்டி ஏறுவதற்கு தற்காலிகமாக மண் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்பது எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 கோட்டம் 186ல் இராஜேஸ்வரி நகர் மெயின் ரோடு கதவு எண் 36–ல் ரோட்டை ஆக்கிரமித்து கட்டப்பட்ட சரிவுபாதை அகற்றப்பட்டு, தற்சமயம் வண்டி ஏறுவதற்கு தற்காலிகமாக மண் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G. வெங்கடேஷ்,
கதவு எண் 233, L.F.ரோடு,
கச்சிராயப்பாளையம்–606 207,
சின்ன சேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்,

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை
சென்னை 600 091

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/3/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032